**பத்திரிக்கைக் குறிப்பு**

# இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in
**e-mail:** helpprd@rbi.org.in

**பத்திரிக்கைத்தொடர்பு அலுவலகம்,**
மத்திய அலுவலகம், தபால் பெட்டி எண் 406,
மும்பை – 400 001.

**டிசம்பர் 5, 2002**

## சுத்தமான பணத்தாள் கொள்கை: இந்திய ரிசர்வ் வங்கி

இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் திரு வேபா காமேசம் இந்திய ரிசர்வ் வங்கி நவம்பர் 2001 தொடங்கி வெளியிட்ட நெறிமுறைக் கட்டளைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் பணத்தாள் கட்டுகளைக் கம்பிப் பிணைப்பான்களால் கட்டுவதை முற்றிலுமாகத் தவிர்த்து, தாள் அல்லது பாலித்தீன் கச்சைகள் மூலம் இறுக்கி கட்ட வேண்டும் எனவும் அதனால் பணத்தாள்களின் ஆயுள்கூடும் எனவும் சுட்டிக்காட்டி வங்கிகள் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினார். துணை ஆளுநர் இன்று டெல்லியிலுள்ள பொதுத்துறை வங்கிகள் மற்றும் பணவறைச் செயல்பாடுடைய இதர வங்கிகளின் தலைமை நிருவாகிகளைச் சந்தித்து இந்திய ரிசர்வ் வங்கியின் சுத்தமான பணத்தாள் கொள்கையைச் செயல்படுத்துவது தொடர்பான அம்சங்களை விவாதித்தார். இந்திய ரிசர்வ் வங்கியின் சுத்தமான பணத்தாள் கொள்கையின் நோக்கம் குடிமக்களிடமிருந்து புழக்கத்திலுள்ள பழுதான பணத்தாள்களைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்குத் தரமான பணத்தாள்களையும் நாணயங்களையும் வழங்க வேண்டும் என்பதே. அத்துடன் திருப்பப் பெறும் பணத்தாள்களை வங்கிகள் மீண்டும் மக்களுக்கு வழங்காமல் தரமான பணத்தாள்களையே வழங்க வேண்டுமென இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியது. இந்திய ரிசர்வ் வங்கி பணத்தாள்களைக் கையாளும் அதனுடைய எல்லா அலுவலகங்களிலும் விரைந்து செயல்படும் பணத்தாள் சரிபார்த்துச் செயல்படும் முறைமை (பசெசெமு)(CVPS) இயந்திரங்களை நிறுவியுள்ளது. இவ்வியந்திரங்கள் ஒரு மணி நேரத்தில் 50000-60000 தாள்களைச் சரிபார்த்து அழுக்கடைந்த தாள்களைக் கணினிச் செயல்பாட்டின் மூலம் பிரித்துத் துகள்களாக்கி அத்துகள்களைக் கட்டிகளாக்க வல்லவை.

துணை ஆளுநர் சுத்தமான பணத்தாள் கொள்கையை அறிவித்த 1999 ஆம் ஆண்டுமுதல் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணத்தாள்கள் நாணயங்கள் வழங்கும் செயல் விரைவுபடுத்தப்பட்டது. பணத்தாள்கள் மீது எழுதக்கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது. வங்கிகள் அழுக்கடைந்த மற்றும் சிதைந்த பணத்தாள்கள் பரிமாற்றத்தில் எவ்வித இடையூறுமின்றிச் செயல்பட வேண்டுமென இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலின்படி சுத்தமான பணத்தாள் கொள்கையை பணத்தாள்களைக் கையாளும் பணவறை வசதியுடைய வங்கிக் கிளைகள் வாடிக்கையாளர்களுக்கு

மட்டுமன்றி ஏனையோருக்கும் இந்த வசதிகளை நீட்டிக்க வேண்டும். இந்த அறிவுறுத்தல் முற்றிலுமாகப் பின்பற்றப்படவில்லை எனப் பொது மக்களிடமிருந்தும் வணிகர்களிடமிருந்தும் புகார்கள் தொடர்ந்து பெறப்படுகின்றன.

பணவறை வசதிகளைக் கொண்ட சில கிராமப்புற, ஓரளவு நகர்ப்புற வங்கிக்கிளைகள் இச்செயல்பாட்டில் வரையறைப்படுத்தப்பட்ட போக்கைக் கடைப்பிடிக்கின்றன. அவை குறைந்த மதிப்பு கொண்ட பணத்தாள்களை ஏற்பதில்லை. இவ்வசதியை மேம்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி இதுபோன்ற வங்கிப்பணவறைகளுக்கு மாதாந்தர அடிப்படையில் சில்லறை நாணயங்களை வழங்க இலக்குகளை வலியுறுத்துகிறது. அத்தகைய வங்கிகளிடமிருந்து இந்திய ரிசர்வ் வங்கி செயல்பாட்டு அறிக்கைகளைப் பெற்று அவற்றை வழிநடத்துகிறது. மேலும் சோதனை முறையில் இவ்வாண்டு செப்டம்பர்-நவம்பர் மாதங்களில் சில குறிப்பிட்ட மையங்களில் மாதத்தில் ஒரு நாள் பணத்தாள் பரிமாற்ற பணவறையைத் திறந்து வேறுபணியை மேற்கொள்ளாது பணத்தாள் பரிமாற்றப் பணிமூலம் பழுதான பணத்தாள்களைப் பெற்றுக்கொண்டு சில்லறை நாணயங்கள் வழங்க வேண்டுமென வங்கிகளை இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுக்கொணடது. இந்த நடவடிக்கைக்கு பொதுமக்களிடம் மகத்தான பதில் நடவடிக்கை இருந்ததென வங்கிகளிடமிருந்து வந்த அறிக்கைகள் எடுத்துக் காட்டின. எனவே இந்த ஏற்பாட்டினை ஒரு நிரந்தரச் செயல்திட்டமாக வங்கிகள் முழுமனத்தோடு நடத்த வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது. எந்த மையத்தில், மாதத்தில் எந்த ஞாயிற்றுக் கிழமையில் என்பனவற்றை அந்தந்த வங்கிகளே முடிவு செய்து கொள்ளலாம்.

இது தொடர்பாக பணவறைக்கிளைகளுக்கும் வங்கிக் கிளைகளுக்குமிடையே மிக உயர்ந்த அளவு ஒருங்கிணைப்புச் செயல்பாடு தேவை என்பதை ஆளுநர் வலியுறுத்தினார். பொதுமக்களுக்கு கம்பிப்பிணைப்பான் பயன்படுத்தாத பணத்தாள்கள் கிடைக்க உதவுவதோடு இந்திய ரிசர்வ் வங்கியும் கம்பிப்பிணைப்பில்லாத பழுதான பணத்தாள்களைப்பெற்று அவற்றைச் சரிபார்த்து செயற்பாங்குக்குள்ளாக்கி அழிக்க ஏதுவாக பணவறை வசதியுடைய கிளைகள், பணத்தாள்களுக்குக் கச்சையிடும் கருவியோடு மேஜை மீது இயக்கவல்ல இயந்திரங்களை நிறுவி வங்கிக் கிளைகளின் செயல்பாட்டை இயந்திரமயப்படுத்தி நடத்த வேண்டிய அவசியமும் நேரமும் வந்துவிட்டதெனவும் அவர் அறிவித்தார். பணத்தாள் மற்றும் நாணயங்கள் செலுத்தும் செயல்பாட்டின் முறையான ஒருங்கிணைப்புக்காக இந்திய ரிசர்வ் வங்கியின் மண்டல இயக்குநர்களோடு தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். சுத்தமான பணத்தாள் கொள்கையை செயல்படுத்துவதில் இந்திய ரிசர்வ் வங்கிக்கு வங்கிக் கிளைகள் தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்குவார்கள். எனவே இது தொடர்பான வேறு ஒழுங்குமுறைத் தலையீடு ஏதும் தேவையில்லை என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அல்பனா கில்லாவாலா
பொது மேலாளர்

**பத்திரிகை வெளியீடு-2002-2003/589**